அ.வ.எண்: 25/2017 நாள்: 22.01.2026

வா.சா.2 –சேவியர் அந்தோனிசாமி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சின்னப்பன் என்பவருக்கு சூசை உடையார் மற்றும் சிவத்தி உடையார் என்ற இரு மகன்கள் உள்ளனர் என்றால் சரிதான். சூசை உடையாரின் வாரிசுகள் தான் தாவா வழக்கின் வாதிகள் என்றால் சரிதான். சிவத்தி உடையார் என் மகன் அந்தோணி தான் தாவா வழக்கின் 1–ம் பிரதிவாதி என்றால் சரிதான். சூசை உடையார் எப்பொழுது இறந்தார் என்றால் 2009 ஆம் ஆண்டு இறந்தார். அமல்ராஜ் 2002 ஆம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் 176/3 மற்றும் 176/7 என்றால் சரிதான். சர்வே எண்கள் 176/3, 176/7 புஞ்சை நிலம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் அருகே தான் சர்வே எண்கள் 176/4, 176/8 உள்ளது என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. தாவா சொத்துக்களை சுற்றி கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது

என்றால் ஒரு பக்கம் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது.

2. தாவா சொத்துக்களில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் மூன்று வீடுகள் மற்றும் நான்கு கடைகள் உள்ளன. மேற்படி வீடுகள் மட்டும் கடைகளை தனி நபர்கள் தான் கட்டியுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வீடுகள் மட்டும் கடைகளுக்கு மின்சார இணைப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடுகள் மட்டும் கடைகளுக்கு வீட்டு வரி ரசீதுகளோ அல்லது மின் கட்டண ரசீதுகளோ, வாதிகளின் பெயரில் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்கள் 176/3 மற்றும் 176/4 ஆகியவற்றில் எனக்கு சொந்தமான கேணி உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி வீடுகள் குறித்தோ, கேணிகுறித்தோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துகளுக்கு தற்போது வாதிகள் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக கோட்டாட்சியரிடம் வழக்கு நடைபெற்றது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. தாவா சொத்துக்கள் தற்போது பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல, வாதிகள் அனுபவத்தில் தான் உள்ளது. என்ன பரிகாரம் கேட்டு தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்

தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றும், நான் வழக்கிற்காக வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல. வாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான், வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதற்காக நான் அவர்களுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.01.22 16:12:45 +0530